know from the Hon. Minister whether quick action to print all the text books which are required by the Telugu students in the State will be taken ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது துவக்கப்பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளிகள் வரையில் அவற்றுக்கான பாடப் புத்தகங்களை வகுப்பு வாரியாக நாம் வெளியிட்டு வருகின்றோம். விரைவில் எல்லாப் புத்தகங்களும் வெளியிடப்பட வேண்டும் என்ற முறையில்தான் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம். இன்னும் சில ஆண்டுகளில் இப்படி அரசே அனைத்தையும் வெளியிடும் தன்மை முற்றுப்பெறும்.

ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு கோடை விடுமுறை

* 89 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்கள் கோடை விடுமுறையை அனுபவிப்பதற்கு தடை ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், தடையைப் போக்கிட அரசு ஏதேனும் முயற்சி மேற்கொண்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஒரே இடத்தில் ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றவர்களுக்கும் அதே இடத்தில் ஆசிரியர் அல்லாத ஊழியர் என்ற முறையில் பணி யாற்றுகின்றவர்களுக்கும் இடையிலுள்ள சில நடைமுறை வித்தியாசங்களை நீக்குவதற்கு அரசு ஏதாவது வழிவகை காணுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த இரண்டு தரப்பினருக்கும் இடையிலுள்ள சில நடைமுறை வித்தியாசங்களைப் போக்க வேண்டும் என்று கூறுவது சரியில்லை. ஆனால் தமிழ் நாட்டில் அரசுத் துறையில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விடுப்புச் சலுகைகளை தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களல்லாத ஊழியர் களுக்கும் பொருந்தும் என்று ஆணை பிறப்பித்து இருக்கிறோம்.

அந்த வகையில் அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு உள்ள நடைமுறை விதிகளை, விடுப்பு போன்ற சில விதிமுறைகளை அனுபவிக்க தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கும் உரிமை உண்டு என்று அளிக்கப்பட்டிருக்கின்றது.

Agrarian History of Tamil Nadu.

*90 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Historical Research Commission has conducted a Seminar on "Agrarian History of Tamil Nadu" in October, 1974; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 18 ஆம் நூற்றாண்டு நடுப் பகுதியிலிருந்து 20 ஆம் நூற்றாண்டு நடுப்பகுதி வரையிலான தமிழ்நாட்டின் வேளாண்மை வரலாறு இக் கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டது. இன்றைய வேளாண்மை அமைப்புக்கும் அன்றைய சென்னை ராஜதானியில் நிலவி வந்த அரசியல், சமூக வரலாற்றுக்கும் உள்ள தொடர்புகளை வெளிப்படுத்துவதே இக்கருத்தரங்கின் நோக்கமாகும்.

(முற்பகல் 9-30)

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister for Education when they are going to publish these articles?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தக் கருத்தரங்கு 1974 அக்டோபர் 23, 24 ஆம் நாட்களில் நடைபெற்றது. தமிழ்நாடு வரலாறு ஆராய்ச்சி மன்றம் இக்கருத்தரங்கை நடத்தியது. கருத்தரங்கைத் தொடங்கி வைத்து ஆணையாளர் நல்கிய கருத்துகள், டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷையாவின் தொடக்க உரை, டாக்டர் சாரதா ராஜு அவர்களின் ஆராய்ச்சி அறிக்கை, டாக்டர் தருமகுமார் அவர்களின் ஆராய்ச்சி அறிக்கை, டாக்டர் அருண் பந்தோபாத்தியாயா அவர்களின் ஆராய்ச்சி அறிக்கை, பேராசிரியர் இர்ஃபன் ஹபீப் அவர்களின் ஆராய்ச்சி அறிக்கை, கருத்தரங்கு அளித்த பரிவுரைகள் ஆகியவை அந்தக் கருத்தரங்கில் படிக்கப்பட்டன. அதன்மீது இனி ஆராய்ச்சி நடத்த இருக்கிறார்கள். அதற்கு ஆராய்ச்சி மாணவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.